සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நில அளவையாளர்கள் சேவையின் (இ.நி.அ.சே.) வகுப்பு II தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2018**

Second Efficiency Bar Examination for Officers in Class II, Grade II of the Sri Lanka Surveyors' Service (SLSS) - 2018

**(01) காணிச் சட்டம் மற்றும் காணிகளை அளத்தல்**

Land Law and Surveying of Lands

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** (i) நீதிமன்ற கட்டளை அளவைகளில் காணித் துண்டு விபரமடங்கிய அட்டவணைகளினைத் தயாரிக்கும்போது இடம்பெறவேண்டிய தகவல்கள் யாவை? *(06 புள்ளிகள்)*

(ii) காணி சுவீகரிப்பு அளவைகளில் ஒரு காணித்துண்டுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உரிமையாளர்களின் கோரல்கள் இருந்தால், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன? *(08 புள்ளிகள்)*

(iii) ஒதுக்கல் நிலங்களுக்காக அளவைகள் மேற்கொள்ளும் போது கடைப்பிடிக்க வேண்டிய பொது நடைமுறைகள் என்ன? *(06 புள்ளிகள்)*

**2.** (i) பொது எல்லைகள் அல்லது பொது மற்றும் நிலைப்படுத்திய அல்லது ஒரே மாதிரியல்லாத நிலையான எல்லைகளுக்கான விபரப் புள்ளியொன்றின் கிடையான நிச்சயமற்ற தன்மையின் பெறுமானம் என்ன? *(03 புள்ளிகள்)*

(ii) கடத்திரள் அளவைப் பிரதேசமொன்றில் பிற்கால அளவையின் போது எல்லைப் புள்ளிகளை மீள் தாபித்தலில் கடைப்பிடிக்க வேண்டிய துல்லிய பெறுமானம் என்ன? *(03 புள்ளிகள்)*

(iii) 1 : 50, 000 பிரதேசவியற் படங்களின் நிர்வாக எல்லைகள், இடங்களின் பெயர்கள் மற்றைய விவரங்களை களப்பரிசீலனை செய்யும்போது துல்லியமாக சரிபார்க்க எடுக்கும் நடவடிக்கைகள் என்ன? *(08 புள்ளிகள்)*

(iv) விபர அளவையின் போது எல்லைத் தரவுகளை சேகரிக்கும் சந்தர்ப்பத்தில் கருத்தில் கொள்ள வேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் வரையறைகள் என்ன? *(06 புள்ளிகள்)*

**3.** (i) காணி உரித்துப் பதிவில் முக்கிய படிமுறைகள் என்ன? *(06 புள்ளிகள்)*

(ii) காணி உரித்துப் பதிவிற்காக கடத்திரள் அளவை மேற்கொள்ளுவதற்கு தகுதி உடையவர்கள் யார்? *(04 புள்ளிகள்)*

(iii) காணி உரித்துப் பதிவிற்காக கடத்திரள் அளவை எந்த சட்டத்தின் எப்பிரிவின் கீழ் செய்யப்படல் வேண்டும்? *(04 புள்ளிகள்)*

(iv) ஒரு கடத்திரள் படம் தயாரிக்கப்பட்ட பின்னர், அதற்குரிய பழைய ஆவணங்களில் என்ன வகையான திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும்? *(06 புள்ளிகள்)*

**4.** (i) காணி சுவீகரிப்பதற்கான பணிப்புரை மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் முறை என்ன? *(04 புள்ளிகள்)*

(ii) கடத்திரள் வரைபடம் தயாரிக்கப்பட்ட பிரதேசத்திற்கு எவ்வாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் அளவைகள் மேற்கொள்ளப்படும்? *(08 புள்ளிகள்)*

(iii) தற்போது நில அளவைத் திணைக்களத்தில் அளவையியல் படமாக்கல் வேலைகளுக்கு பாவிக்கப்படும் புதிய தொழில் நுட்ப முறைகள் எவை? அவற்றைச் சுருக்கமாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

[பக் 2 ஐப் பார்க்க.

5. (i) நில அளவைச் சட்டத்தினால் நில அளவைத் திணைக்களத்தின் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? *(08 புள்ளிகள்)*

(ii) கடத்திரள் அளவை மேற்கொள்ளும் பகுதியில் மேலதிக அளவை மேற்கொள்ள வேண்டிய காணி உரித்துப் பதிவுச் சட்டத்தின் என்ன பிரிவின் கீழாகும்? *(04 புள்ளிகள்)*

(iii) நில அளவைச் சட்டத்தின் படி காணி அளவையிற்கு தடங்கல் ஏற்படுத்தினால் எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன? *(08 புள்ளிகள்)*

6. (i) இலங்கையில் உள்ள அரசுக்கு உரிமையான காணிகளை அளிப்பதற்கும் உடைமையகற்றவும் செயற்படுத்தப்படும் கட்டளைச் சட்டங்கள் என்ன? *(03 புள்ளிகள்)*

(ii) காணி சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உடைமையாக்கப்பட்ட விவசாய மற்றும் தோட்டக் காணிகளை அரசுடைமையாக்கும் சட்டம் என்ன? *(03 புள்ளிகள்)*

(iii) பூகோள அமைவுத் தொகுதியை (Global Navigation Satellite System - GNSS) பாவித்துப் புவிப்பாத்துப் பாலனப் புள்ளிகளை நிறுவதற்கான வழிகாட்டல்கள் எவை? *(08 புள்ளிகள்)*

(iv) கடத்திரள் அளவைகளில் கட்டுப்பாட்டு பாலனப் போகுவில் (control traverses) செய்யப்படவேண்டிய செம்மையின் வகைகள் என்ன? *(06 புள்ளிகள்)*

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை நில அளவையாளர்கள் சேவையின் (இ.நி.அ.சே.) வகுப்பு II தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2018

# Second Efficiency Bar Examination for Officers in Class II, Grade II of the Sri Lanka Surveyors' Service (SLSS) - 2018

## (02) அளவைகள் முகாமைத்துவம்
## Survey Management

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** (i) ஒரு அளவையாளர் என்ற வகையில் 'லேசர் ஸ்கானிங்' (Laser Scanning) மற்றும் 'பூரணமானி' தொழிநுட்ப முறையில் அளவை செய்தலை ஒப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) நிர்வாகம் என்ற பார்வையில் லேசர் ஸ்கானிங் மற்றும் பூரணமானி தொழிநுட்ப முறையில் அளவை செய்தலை ஒப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(iii) வரைபடயியலில் LiDAR தொழில் நுட்பத்தை பயன்படுத்தி எவ்வாறு நீர் நிலைகளை இற்றைப்படுத்தல் (updates) செய்வீர்? *(05 புள்ளிகள்)*

(iv) உமது நில அளவை வேலையை வினைத்திறனுள்ளதாக முகாமைத்துவப்படுத்துவதற்கு "காணி வலையமைப்பு (parcel fabric)" என்னும் கருதுகோளை எவ்வாறு பயன்படுத்துவீர்? *(05 புள்ளிகள்)*

**2.** (i) "நில நிருவாகம்" என்பதால் என்ன விளங்குகின்றீர்? *(05 புள்ளிகள்)*

(ii) ஒரு தகவல் முறைமையை வடிவமைக்கின்றபோது, கருத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் எவை? *(05 புள்ளிகள்)*

(iii) ஒரு திறமையான நில நிருவாகத்தின் **ஐந்து** நன்மைகளை எழுதுக. *(05 புள்ளிகள்)*

(iv) அரச காணிகளை பொது நிலப்பட்டியல் (Public Land Inventory / Register) செய்வதின் முக்கியத்துவத்தை எழுதுக. *(05 புள்ளிகள்)*

**3.** (i) சமுதாயத்தில் பொதுவாக காணப்படுகின்ற **ஐந்து** நில மோதல்களை எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) நில மோதல்கல்களை குறைப்பதற்காக நில நிர்வாகம் எவ்வாறு உதவி செய்கின்றது? *(05 புள்ளிகள்)*

(iii) நில மோதல்கல்களை குறைப்பதற்காக ஒரு நில அளவையாளரின் வகிபாகம் என்ன? *(10 புள்ளிகள்)*

**4.** (i) இடம் சார்ந்த தரவுகளை அளப்பதற்கான (Data capturing) **ஐந்து** முறைகளை எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) வான் அளவை ஒளியியல் படத்துடன் ஒப்பிடுகையில் செய்மதி படங்களைப் பயன்படுத்துவதனால் உள்ள **ஐந்து** நன்மைகளை எழுதுக. *(05 புள்ளிகள்)*

(iii) CORS தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அளவை மேற்கொள்ளும் போது செய்மதி சமிக்கைகள் தொடர்பு சமிக்கைகள் **இல்லாதவிடத்து** அளவை மேற்கொள்ளும் முறையை முன்மொழிக. *(05 புள்ளிகள்)*

(iv) நிலையான (Fixed) மற்றும் பொது எல்லைகளின் (General) நன்மை, தீமைகளை எழுதுக. *(05 புள்ளிகள்)*

[பக் 2 ஐப் பார்க்க.

**5.** (i) கோவில் மற்றும் தேவாலய காணிகளில் நீண்டகாலமாக ஆக்கிரமித்து வாழ்ந்த நபர்களின் காணிகளுக்கு "காணியின் தீர்வு மற்றும் படம் தயாரித்தல்" என குறிக்கப்பட்டுள்ள நில அளவை வேண்டுகோள் கிடைக்கப் பெற்றுள்ளது. இந் நில அளவை வேண்டுகோள் எவ்வாறு மேற்கொள்வீர என சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

(ii) ஒரு தனியார் நில உரிமையாளர் அரசாங்கத்தின் பயன்பாட்டிற்காக அவருக்குச் சொந்தமான ஒரு காணியினை கையளிக்க விரும்பினால், அதன் வெற்றிகரமான பரிவர்த்தனைக்கான செயல் முறையில் உள்ள அனைத்து நடவடிக்கைகளையும் சுருக்கமாக குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(iii) காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் கீழ் அரச காணியினை பகிர்ந்தளிப்பதற்கான செயற்பாட்டில் உள்ள பிரதான படி முறைகள் **ஐந்து** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(iv) 'காணி ஒருங்கிணைப்பு (Land Consolidation)' என்பதனால் என்ன விளங்குகின்றீர்? *(05 புள்ளிகள்)*

**6.** (i) பண்ணை நிலங்களை அபிவிருத்திக்காக பொதுமக்களுக்கு பகிர்ந்துகொடுக்கும் போது மண் அரிப்பு தடுக்கும் வகையிலும், நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் வகையில் செயல்பட வேண்டும். அவ்வாறு செய்யும்போது கருத்தில் கொள்ள வேண்டிய **மூன்று** தொழில்நுட்ப அம்சங்கள் என்ன? *(05 புள்ளிகள்)*

(ii) 'தேசிய இடம்சார்ந்த தரவு உள்கட்டமைப்பினை (National Spatial Data Infrasture - NSDI)' வரையறை செய்க. *(05 புள்ளிகள்)*

(iii) LiDAR தொழில் நுட்பத்தை பாவித்து அளக்கும் போது மில்லியன் புள்ளிகள் பெறப்படுகிறது. அத்தரவுகள் அதி நவீன கணணிகளில் தொகுத்து உள் நினைவகத்தில் பேணப்படுவது கடினமாகும். இந்த சந்தர்ப்பத்தை கையாளுவதற்கு உம்மால் எடுக்கும் வழிமுறைகள் என்ன? *(05 புள்ளிகள்)*

(iv) படமாக்கல் தரவின் காலத்தை மேம்படுத்துவதற்காக, LiDAR தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தரவுகளை சேகரிப்பதனால் ஏற்படும் மிகச்சிறந்த பயனுள்ள நன்மை என்ன? *(05 புள்ளிகள்)*

❋ ❋ ❋